**கவனிக்க.-** *2016.08.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1981 - 2016 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2016.08.19

*1981 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1453 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1457 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1462 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1450 | நானாவித அறிவித்தல்கள் | - |



**கவனிக்க.-** *சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016,செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி.கே.எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விலைமனுக்கான கேள்விப்பத்திரம் – 2017

எனது இல. : 01/12/T/2017/நீர்கொழும்பு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக தொகை மற்றும் சில்லறைக்கு கீழ்வரும் கள்ளுத் தவறணை 2017, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2017, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின்கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2016.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணை விலைமனு மூலம் பெற எதிர்பார்ப்பவர்கள் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணமாக நிரப்பி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் அதற்குரிய உறுதியின் பிரதியையும் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி கீழே குறிப்பிட்டுள்ள அத்தவறணைக்குரிய கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர் கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2016.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

6. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத கள்ளுத் தவறணை மற்றும் கள்ளுத் தவறணை 2016.11.16 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானிப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும்/மாதத்திற்கான குத்தகை முதலில் இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

8. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

9. இவ்விற்பனை தொடர்பாக எனது முடிவே இறுதியாகும்.

ஏ. கே. ஆர். அலவத்த,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2016, ஓகத்து 01.

**அட்டவணை**

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல. 10 – செத்தப்பாடுவ | நீர்கொழும்பு | செத்தப்பாடுவ ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21<br>மு. ப. 10.30 |

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 2. இல. 11 - பசியாவத்தை | நீர்கொழும்பு | பசியாவத்த ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 3. இல. 12 - பிட்டிபனை | நீர்கொழும்பு | பிட்டிபனை ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 4. இல. 15 - குரண | நீர்கொழும்பு | குரண ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 5. இல. 16 - காமாச்சிஓடை | நீர்கொழும்பு | காமாச்சிஓடை ஊர் மட்டும் | மு. ப. 11. 00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 6. இல. 17 - உடையார்தோப்பு | நீர்கொழும்பு | உடையார் தோப்பு ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 7. இல. 18 - குடாபாடுவ | நீர்கொழும்பு | குடாபாடுவ ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 8. இல. 19 - தளுபத்த | நீர்கொழும்பு | தலுபத்த ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 9. இல. 20 - போருதொட்ட | நீர்கொழும்பு | போருதொட்ட ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 10. இல. 21 - பலங்கதுர | நீர்கொழும்பு | பலங்கதுர ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2016.09.21 மு. ப. 10.30 |
| 11. இல. 22 - கொச்சிக்கடை | நீர்கொழும்பு | கொச்சிக்கடை ஊர் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,500 | 2016.09.21 மு. ப. 10.30 |

8-436/1

---

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2017

கீழ் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 2017, சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2016.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை

செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப்பத்திரத்துடன் பொறியிடப்பட்டதும் இடது பக்க மேல் மூலையில் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் போடவோ அல்லது கட்டான பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது கையொப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2016.09.22 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் கட்டான பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் 2016.11.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்குக் குறையாது தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக கட்டானை பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கையொப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டானை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

கட்டானை பிரதேச செயலகம்,
தெமங்ஹந்திய,
2016, ஓகத்து 03.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | முக்கலன்கமுவை இல. 13 | கட்டானை | முக்கலன்கமுவை கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2016.09.22 மு.ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2016.09.22 மு.ப. 10.30 |
| 3. | ஆனகாலை இல. 13 | கட்டானை | ஆனகாலை கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 500 | 2016.09.22 மு.ப. 10.30 |
| 4. | கிழக்கு கட்டான இல. 24 | கட்டானை | கிழக்கு கட்டான கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2016.09.22 மு.ப. 10.30 |

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு பணம் ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டானை | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2016.09.22 மு.ப. 10.30 |
| 6. | பம்புக்குளி இல. 26 | கட்டானை | பம்புக்குளி கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 1,000 | 2016.09.22 மு.ப. 10.30 |

8-524

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* டென் கேட் பர்மெஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 114223
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.06.08
*பதிவு முகவரி:* இல. 83/2, தர்மபால மாவத்தை, கொழும்பு 07

(திருமதி) ஆர்.கே.ஜயவீர,
கம்பனிச் செயலாளர்.

8-391

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் பொறுப்பு வரையறுத்தல் கம்பனி 2016.07.05 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* அல் கமர் எண்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவு முகவரி:* இல. 1484/1, ஹோகந்தர வீதி, பன்னிப்பிட்டிய
*பதிவு செய்யப்பட்ட இல.:* பீவீ 114844

எஸ். எம்.எம். மகெம்,
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 367, 3 ஆம் மாடி,
டாம் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் : 24448191
கைத்தொலைபேசி: 0777325414
மின்னஞ்சல் : thelawoffice367@gmail.com

8-408/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* என்ரிபி லேன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம் :* பீ வீ 113282
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.04.29
*பதிவு முகவரி:* இல. 38, வராகொட பாதை, களனி

*கம்பனியின் பெயர் :* பெகசஸ் லேன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம் :* பீ வி 113278
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2016.04.29
*பதிவு முகவரி:* இல. 38, வராகொட பாதை, களனி

இப்ராஹிம் மொஹமட் அஷ்ரப்,
கம்பனிச் செயலாளர்.

8-409

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் புதிய கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* இடெல்லா சொப்ட் (பிறைவேட்) லிமிட்டட்
*கம்பனி இல.:* பீவீ 76864
*பதிவு முகவரி:* இல. 246, கந்தகுருந்து வத்தை, தெதியாவல, வஸ்கடுவை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2011.02.01

கல்ருப்கோ மெனேஜ்மன்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-411

## ஸ்ரீ லங்கா ரீடெய்லர்ஸ் அசோசியேசன்ஸ் ( கரண்டி) லிமிட்டட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

ஸ்ரீ லங்கா ரீடெய்லர்ஸ் அசோசியயெசன்ஸ் (கரண்டி) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 3 ஆந் திகதி ஜீஎல் 2376 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது இல. 30, அமரசேகர மாவத்தை, கொழும்பு 05 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

கந்தையா நீலகண்டன்,
தவிசாளர்.
என் என்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செகரட்டறீஸ் ( பிறைவேட் ) லிமிட்டட்,
( கம்பனிச் செயலாளர்கள்).

எம் & என் கட்டிடம்,
( 5 ஆம் மாடி),
இல. 02, டீல் பிளேஸ்,
கொழும்பு 03.

8-426

---

## ஆக் ஸ்றீட் ( பிறைவேட்) லிமிட்டட் முன்பு எல் அன்ட் ரீ இன்பராறக்ரஸ் டெவலப்மன்ட் புரஜக்ட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி பதிவு இல. பீவீ 12729)

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி, எல் அன்ட் ரீ இன்பராறக்ரஸ் டெவலப்மெண்ட் புரஜக்ட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (முன்னைய பெயர்) என்ற அதன் பெயரை ஆக் ஸ்றீட் (பிறைவேட்) லிமிட்டட் (புதிய பெயர்) என 2016 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆந் திகதி ( கம்பனி பதிவு இலக்கம் பீவீ 12729) இன் கீழ் தன் பெயரை மாற்றம் செய்துள்ளது என்பதையும் இக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 16-03, 16 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் என்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செகரட்டறீஸ் ( பிறைவேட் ) லிமிட்டட்
(கம்பனிச் செயலாளர்கள்).

எம் & என் கட்டிடம்,
( 5 ஆம் மாடி),
இல. 02, டீல் பிளேஸ்,
கொழும்பு 03.

8-471

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2016.07.22 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : எவ். ஐ. ரி. டிரவல் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம்: பீவீ 115190
பதிவு முகவரி: இல. 8, 2 ஆம் ஒழுங்கை, தெஹிவளை

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

8-486

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2016.07.14 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : என் சி டி எலையன்ஸ் லங்கா
கம்பனி பதிவிலக்கம் : ஜிஏ 3215
பதிவு முகவரி: மே/பா டயபிட்டீஸ் அசோசியேஷன் ஒஃப் ஸ்ரீ லங்கா, 50, சரண மாவத்தை, ராஜகிரிய

கோப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

8-487

---

## எக்ஸ்மெட்ஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் ஒருங்கிணைப்புக்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் எக்ஸ்மெட்ஸ் லங்கா( பிறைவேட்) லிமிட்டட் ஆனது 2016, யூலை 28 ஆந் திகதியில் கம்பனி பதிவு இலக்கம் பிவீ 115355 இன் கீழ் பதிவாகியுள்ளது என இத்தால் அறிவிக்கின்றோம் . மேலும் இல. 116/10, ரொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7 இல் இதன் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென்ட்ரல் கோப்பரேட் அன்ட் கல்சல்டன்சி
சேர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

இல. 116/10,
ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 7.

8-501

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஜே அன்ட் எம் ஹோல்டிங்ஸ் இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 114921
பதிவுமுகவரி: இல.40, கோல்பேஸ் கோர்ட் 2, கொழும்பு 3

செக்ரெடேரியல் (பிறைவேட்) லிமிட்டட்.

பீவீ 5958

8-541/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பி அன்ட் ஆர் ட்ரேடிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவி 115030
பதிவுமுகவரி: இல.40, கோல்பேஸ் கோர்ட் 2, கொழும்பு 3

செக்ரெடேரியல் (பிறைவேட்) லிமிட்டட்.

பீவீ 5958

8-541/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2)ஆம் பிரிவின் கீழ் பகிரங்க அறிவித்தல்.-
இல. 109, காலி வீதி, கொழும்பு 03 என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடைய எடிசலாட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், அதன் குறிப்பிடப்பட்ட மூலதனத்தை 13,660, 723, 783.11 ரூபா இலிருந்து 6,797, 847,808.11 ரூபா ஆக குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் நியதிகளின் படி இத்தால் பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

எடிசலாட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்.

8-552

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏ எம் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவி 115439
பதிவுத் திகதி: 2016, ஓகத்து 1
பதிவு செய்யப்பட்ட முகவரி: இல.62- 1/1, அனுலா வீதி, கொழும்பு 6

திருமதி எஸ். இராஜகுலேந்திரா,
சட்டத்தரணி.

இல. 34/1, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு 6.

8-571

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-

நிறுவனத்தின் பெயர் : லேகும் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல.: பீவி 114074
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

நிறுவனத்தின் பெயர் : போண் டிவலப்மண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல.: பீவி 114288
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05

செக்றிடேறியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டட்

நிறுவனத்தின் பெயர் : மெப்றடெஸ்ரே இன்வெஸ்ட்மண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல.: பீவி 114290
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

நிறுவனத்தின் பெயர் : ஹங் இலெவன் இன்வெஸ்ட்மண்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல.: பீவி 114472

*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05*

செக்றிடேறியல் ஹவுஸ் அட்வைசரி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனிச் செயலாளர்கள்.

*நிறுவனத்தின் பெயர் : தம்பா புறொப்பட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இல.: பீவி 114572*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 05*

*நிறுவனத்தின் பெயர் : தம்பா எஸ்டேட் (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இல.: பீவி 114632*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 06, பெட்லர் வீதி, கோட்டை, காலி*

*நிறுவனத்தின் பெயர் : ஸம் ஸம் பவுன்டேசன் (கரண்டி) லிமிட்டட்*
*பதிவு இல.: ஜீஎல் 2268*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 83-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06*

*நிறுவனத்தின் பெயர் : பாத் அக்கடமி (கரண்டி) லிமிட்டட்*
*பதிவு இல.: ஜீஎல் 2330*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 11, புகையிரத நிலைய வீதி, கொழும்பு 04*

செக்றிடேறியல் ஹவுஸ் எட்வைசரி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 05.

8-580

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2016. 06.24ஆந் திகதி இக் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது .-

*கம்பனியின் பெயர் : ரிஸானா ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவு இல.: பீவி 114602*
*பதிவு அலுவலகம்: இல.128, கொஹிலவத்தை, ஹங்கொட*

அலி ஹஸன் மொஹமட் கஸ்ஸாலி,
செயலாளர்.

8-586

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொதுவடன, கஹடவில, பர்னாட்வத்த என்ற இடத்தில் வசிக்கும், மெல்லவ தன்திரிகே சேனாதீர ஜயசிங்க (அ.அ.இல. 710540080V) என்ற நான், பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. சீ. வீரசூரிய அவர்களால் எழுதி அனுமதிக்கப்பட்ட (இல. 444, 2011.06.18) ஆந் திகதிய படிவத்தின் அற்றோணி அனுமதியின்படி, பொதுவடன, கஹடவில, பர்னாட் வத்தை என்ற இடத்தில் வசிக்கும் ரணசிங்க ஆரச்சிகே சென்ரா அருந்தி ரணசிங்க(அ.அ.இல. 655563539 V) என்றவருக்கு வழங்கியிருந்த அற்றோணி அனுமதியை இதன் மூலம் சம்பூர்ணமாக தடைசெய்து உள்ளதாக எல்லா மக்களுக்கும் அறியத் தருவதுடன், இதன் மூலம் இந்த அற்றோணி அனுமதியை இதன் பின் என் பொறுப்புடன் அவரால் செய்யப்படும் பொறுப்புகளுக்கு நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்று இந்த படிவம் மூலம் அறியத்தருகின்றேன்.

மெல்லவ தந்திரிகே சேனாதீர ஜயசிங்க.

8-570

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 15, ஸ்ரீ ராமநாதன் மாவத்தை, இல. 260 ஐச் சேர்ந்த (தற்பொழுது கொழும்பு 15, சென்ற் அன்ட்றூஸ் வீதி, இல. 168 இல்) டொன் சுதத் லசந்த பிரதீப் குமார விஜேசிங்ஹ ஆகிய நான், உனவட்டுன, ஆயுர்வேடிக் விலேஜ் கார்டினைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 60770262 V ஐ உடைய யமுனா லலன்கனீ கதலுவ லியனகே என்பவருக்கு, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஹிறந்தி தீபிக்கா மொறவக்க என்பவரால் 2015.02.09 ஆந் திகதி அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கிய 672 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினால் வழங்கப்பட்ட அனைத்து சலுகைகள், அதிகாரங்கள் மற்றும் / அல்லது அனுமதிப்பத்திரம் இன்று தொடக்கம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டு மற்றும்/ அல்லது பின்வாங்கச் செய்யப்படுகின்றதுடன் மேலே யமுனா லலன்கனி கதலுவ லியனகே மேற்படி 672 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை உபயோகித்து மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் பொறுப்புக் கூறவோ பொறுப்பாக இருக்கவும் மாட்டேன் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டீ.எஸ்.எல்.பி.கே. விஜேசிங்ஹ.

8-519

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

பாணந்துறை, அளுபோமுல்ல, எஸ். மஹிந்த மாவத்தை, இலக்கம் 24/5 இலும் தற்போது சைப்பிரஸ் நிகோஷியா, 2042, ஸ்ட்ரோ வோல்ஸ், பீடர் மெரய்ட் வீதி, வரரலம் போ, இல. 21/A இல் வதியும் ஹெட்டி ஆரச்சிகே சுமித்ரா (தே.அ.அ.இல. 718460565 V) கடவுச் சீட்டு இலக்கம் N. 5305845 ஆகிய நான் எனது ஒன்று விட்ட சகோதரர் பாணந்துறை, அளுபோமுல்லை, எஸ். மஹிந்த மாவத்தை, இலக்கம்

*24/5 இல் வதியும் ஹெட்டி ஆரச்சிகே ரமேஷ் ஜீவன்த (தே.அ.அ.இல.912851672 V) என்பவருக்கு நான் கையொப்பமிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.பி.ஜி.வி.கே. டயஸ் குணசேகர என்பவரால் உறுதிப்படுத்திய 824 ஆம் இலக்கமும் 2015.03.02 ஆம் திகதியுமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் எனவும் அவர் செய்யும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பில்லை என இலங்கை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*8-583*

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் லுணுவில தபால், பொரலெஸ்ஸ, திம்பிர வீதியில் வதியும் இலக்கம் 810943610 V கொண்ட தேசிய அடையாள அட்டை உரிமையாளர் கஸ்பாருகே தினேஷ் அனுர நிஷான்த பெர்னாந்து ஆகிய என்னால் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் அற்றோணித் தத்துவ புத்தகத்தில் இலக்கம் 67, தொகுதியில் 4710 ஆம் பக்கத்தில் நாளேட்டில் 2378 இன் கீழ் 2013.08.27 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட, குருநாகல் மாவட்டத்தில் பிரசித்த நொத்தாரிசு ஆர். டபிள்யூ.பீ. எம்.ஜீ. ராஜபக்ஸ அவர்கள் 2013.08.18 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 9024 கொண்ட அற்றோணித்தத்துவம் மூலம் எனது அற்றோணி தத்துவதாரராக இல. 835991989 V கொண்ட தேசிய அடையாள அட்டை யின் உரிமையாளர் மாவத்தகம தபால், வைத்தியசாலை வீதி, இல. 09 இல் வதியும் மிஹிந்துகுலசூரிய தலனி தாரக மிஹிந்துகுலசூரிய எனும் நபர் நியமிக்கப்பட்டதுடன், கூறப்பட்ட அற்றோணித்தத்துவம் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் இரத்துச் செய்யப்படுகின்றதெனவும், அவரினால் எனது அற்றோணி தத்துவதாரராக எனது சார்பில் செய்யப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

கஸ்பாருகே தினேஷ் அனுர நிஷாந்த பெர்னாந்து.

*2016.07.28*

*8-435*

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

தன்கொட்டுவ, தவட்டகஹவத்த, மில்ரோட் என்ற இடத்தில் வசிக்கும் பெட்டிகிரி ஆரச்சிகே சன்ஜய ஸ்ரீநாத் ஆகிய என்னால் தன்கொட்டுவ தவட்டகஹவத்த, மில்ரோட் என்ற இடத்தில் வசிக்கும் பெட்டிகிரி ஆரச்சிகே அச்சினி சுரங்கிகா என்பவருக்கு வழங்கப்பட்ட மத்துகம பிரசித்த நொத்தாரிசு அக்ஷிகா த சில்வா என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவ இலக்கம் 53, 2014, யூலை மாதம் 18 ஆந் திகதி கொண்ட அற்றோணி அதிகாரம் இப்பொழுது முதல் இரத்துச் செய்யப்படுகிறது.

பெட்டிக்கிரி ஆரச்சிகே சன்ஜய ஸ்ரீநாத் .

*8-481*

---

## அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள்

### மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2017

*அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2017, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.*

(i) *1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.*

(ii) *மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.*

*2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்கள் வரை செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடியும் சந்தர்ப்பத்தில் முழுமையான வாடகை காலம் சம்பந்தமாக செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-*

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்டேப்பல் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரிச் சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

“மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் - 2017”

2016.09.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) இலக்கம் | (ஆ) பிரிவு | (இ) மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | (ஈ) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (உ) மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஊ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | (எ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | (ஏ) விற்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகரசபை பிரிவு இல. 09 பிரதேசத்தில் காலி பாதை யின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2016.09.15 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **முக்கியம்.**- 2016.09.15 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2016.11.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

எச். ஆர்.எச். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2016, யூலை 27.

8-398

---

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான உத்தரவுச் சீட்டு - 2017

எனது இல. : 01/12/T/2017/நீர்கொழும்பு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக தொகை மற்றும் சில்லறைக்கு கீழ்வரும் வெளிநாட்டு மதுபானம் 2017, தை மாதம் 1ஆந் திகதி முதல் 2017, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின்கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2016.09.21ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. வெளிநாட்டு மதுபானத்தை விலைமனு மூலம் பெற எதிர்பார்ப்பவர்கள் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணமாக நிரப்பி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் அதற்குரிய உறுதியின் பிரதியையும் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் தாம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி கீழே குறிப்பிட்டுள்ள அத்தவறணைக்குரிய பிரதேச செயலகத்திற்கு கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர் கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2016.09.21 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

6. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையம் 2016.11.16 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

7. தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகை முதலில் இரு மடங்கிற்கு குறையாத முதலை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

8. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

9. இவ்விற்பனை தொடர்பாக எனது முடிவே இறுதியாகும்.

ஏ. கே. ஆர். அலவத்த,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2016,ஓகத்து 01.

***அட்டவணை***

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல.02 கிறீன்பார் (வெளிநாட்டு மதுபானம்) | நீர்கொழும்பு | குண்டன்வில மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2016.09.21 மு. ப. 10.30 |

8-436/2

---

## வெளிநாட்டு மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் தொடர்பான விண்ணப்பம் கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணை 2016/ 2017ஆம் வருடங்களுக்கான குத்தகை விற்பனை

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டு மற்றும் இதன் பிற்காலம் தொடர்பான வெளிநாட்டு மதுபான சில்லறை விற்பனை சட்டதிட்டங்களுக்கு அமையவும் இக்காலத்தில் செல்லுபடியாகும் அனைத்து வருமான வரி அத்தாட்சிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் போது விற்பனைவரி சட்டதிட்டங்களுக்கு அமையவும் மதுபானம் சில்லறையாக விற்பதற்கான வரப்பிரசாதமொன்றை விலைக்கு வாங்குவதற்கான தெல்தோட்டை பிரதேச செயலாளர் மேலதிக அரசாங்க அதிபராகிய என்னால் 2016.08.29 ஆம் திகதி மு.ப.10.30 மணி வரைக்கும் கேள்வி பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. அனைத்து கேள்வியிலும் இலங்கையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பப் படிவம் தயார் செய்யப்பட வேண்டியதுடன்,

அ. கேள்வி முற்பணம் என்ற வகையில் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பின்வரும் துணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் திட்டமான கேள்வி பிணைத்தொகையை வைப்பில் இட்டு அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டையும்,

ஆ. கேள்வியாளர்களின் சொத்துக்கள் அவை அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடத்தில் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை முன்வைத்தல் வேண்டும்.

3. கேள்வி மற்றும் சொத்துக்கள் உறுதிப்பத்திரம் முன்வைப்பது தொடர்பாக குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபா தவறணை குத்தகைக்கு விற்றல் சட்டதிட்டங்களில் அடங்கும் சட்டங்கள் ஒழுங்கு முறையாக பின்பற்றப்படல் வேண்டும் என்று கேள்வி முன்வைப்போரிடத்தில் மிக்க கடுமையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரம் பூரணப்படுத்துவதில் கேள்வியாளர் பின்வரும் தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

I. கேள்விப்பத்திரத்தை முழுமையாக பூரணப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை இலக்கத்தில் மட்டுமன்றி எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

II. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பத்தில் சாட்சியாளர்களின் கையெழுத்து இடப்பட்டிருக்க வேண்டும்.

III. மாற்றங்கள் செய்யும் அனைத்திலும் சொற்கள் திருத்துவதிலும் கேள்வியாளர்களின் சுருக்கக் கையொப்பமும் திகதியும் இட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அங்கு தேவைகளுக்குமுரணாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. முறையாக முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரம்,

அ. பிரதேச செயலாளர் அலுவலத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டு;

ஆ. சொத்து விபரம் தொடர்பான அத்தாட்சி

ஆகியவற்றுடன் கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணை இலக்கத்தையும் பெயரையும் குறிப்பிட்டு தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. குத்தகைக்காக கேள்வி ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடையும் நேரம் மேலே குறிப்பிட்டுள்ள 01 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நேரத்தில் அனைத்து கேள்வியாளர்களும் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. திருப்பதியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்வியாளர் சிறப்புரிமைகளை வாங்கியவர்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு முன்பு தெல்தோட்டை பிரதேச செயலாளரால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றினை பிணைப்பணமாக தெல்தோட்டை பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத்தவறணைகள் நிபந்தனை கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக " குறிப்பிட்ட காசோலையொன்றினால் இலங்கை வங்கியிலோ வழங்கப்பட்ட பாதுகாப்பான காசோலை என அழைக்கப்படும் காசோலை ஒன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. கள்ளுத் தவறணைகளினாலோ வேறு வலுவுடைய அனுமதிப்பத்திரங்களை உடைய மறு வியாபார நிலையங்களினாலோ விற்பனைக்காக மொத்தமாக ( பீப்பாய் கணக்கில் ) கள்ளுக்குடிவகைகள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

8. பாதுகாப்பு காரணமாகவோ அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படுகின்றதாலோ வேறு ஏதும் காரணங்களினாலோ வெளிநாட்டு மதுபான தவறணை தற்காலிகமாக மூடிவிடுவதற்குரிய கட்டளையொன்று பிறப்பிப்பதற்கு எனக்கு ஏற்பட்டால் அவ்வாறு தவறணையை மூடிய காலம் தொடர்பாக குத்தகை வாரத்தில் சலுகை ஏற்பாடு ஏதும் செய்யப்படமாட்டாது.

9 அதற்கு முன்னர் வெளிநாட்டு மதுபான சாலையொன்றை நடாத்திச் சென்றது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதும் ரொக்கப்பணம் கொடுக்க வேண்டியிருந்தால் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் அந்த மிகுதி ரொக்கப்பணத்தை கொடுத்து பூரணப்படுத்தப்பட வேண்டும்.

10. மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ.ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்டை.

தெல்தோட்டை பிரதேச செயலகத்தில்,
2016, யூலை 27.

**அட்டவணை**

**கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அனுமதி அளிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணை பட்டியல் 2016/2017**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரதேச செயலாளர் பிரிவு | தவறணை அமைக்கப்பட வேண்டிய பிரதேசம் | தவறணை திறக்கப்படும் நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபான சாலை | தெல்தோட்டை | தெல்தோட்டை பிரதேச செயலக பிரிவிற்குள் | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 8.00 மணி வரை | 2016.08.29 ஆம் திகதி மு.ப.10.30 வரை |

வெளிநாட்டு மதுபான தவறணையின் குத்தகை விற்பனைக்காக சேமிப்பாக வைக்கப்பட வேண்டிய தொகை 1000.00 ரூபா ஆகும்.

8- 421

# ஏல விற்பனைகள்

## நஷனல் டிவலப்மன்ட் வங்கி பிஎல்சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை

*18 ஆம் இலக்க பிணைஉறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம் :-*

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹாபிட்டிகம் கோரளே, உடகஹபற்று, மீரிகம் பிரதேச சபை எல்லைக்களுக்கு உட்பட்ட ,மீரிகம பிரதேச செயலாளர் பிரிவு, தங்ஓவிட்ட கிராம அலுவலர் பிரிவில், தங்ஓவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள "ஹிருகஹவத்த" (பகுதி) என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜீ.கே.என். திலகசிறி அவர்களால் வரையப்பட்ட, 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 1820 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01A எனக் குறிப்பிடப்பட்டுள்ள (அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் ஜே.ஜீ.கம்மன்கட அவர்களால் வரையப்பட்ட, 2008 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 3524 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீள் அளவை) பிரிக்கப் பட்டதும்,வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு

**காணியின் விஸ்தீரணம்: 03ஏ.0றூ.21.1 பே.**

அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாகவும் அத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட 1820 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்ட அதற்குரிய ஏனைய அனைத்து உரிமைகளுடன்.

கற்பிட்டியில் வசிக்கும் பக்கீர் மொஹிதீன் அப்துல் கபூர் அல்லது மொஹிதீன் அப்துல் கபூர் மற்றும் அப்துல் கபூர் மொஹிதீன் அம்மா ஆகியோரால் (கடனாளிகள்) 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதியிடப்பட்ட 18 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், நஷனல் டிவலப்மன்ட் வங்கி பிஎல்சி (வங்கி) யிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்காக அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

என் டிபி வங்கி பிஎல்சியினால் எமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி,

2016ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:** ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்);
(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 11% (பதினொரு சதவீதம்) வற் வரி;
(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய 1% (ஒரு சதவீதம்) விற்பனை வரி;
(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/1% (இரண்டரை சதவீதம்);
(5) மொத்த விளம்பரச் செலவு;
(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையில் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினல் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**காணிக்குச் செல்லல்:** கண்டியிலிருந்து கொழும்பு வீதி வழியாக சுமார் 63.5 கிலோ மீற்றர் வரை சென்றதும் வீதி ஓரமாக காணப்படும் குறிப்பிட்ட ஆதனத்தைச் சென்றடைய முடியும்,(54 ஆம் கட்டை மற்றும் 54/3 ஆம் கட்டைகளுக்கிடையில் அமைந்துள்ளது.)

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2448448 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் என் டி பி வங்கியின் பீஎல்சி சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
124 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் :<br>24, டொரிங்டன் வீதி,<br>கண்டி. | நகர அலுவலகமும்<br>காட்சியறையும்:<br>290, ஹவ்லொக் றோட்,<br>கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680<br>2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

8-434

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி - நகரக் கிளை

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 அவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்*

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லையில் ஹுணுப்பிட்டிய வாட் இலக்கம் 23 கட்டிடங்கள் இலகக்கங்கள் 115, 117 மற்றும் 119 யூனியன் பிளேஸில் அமைந்துள்ள நில அளவையாளர் என். அபயசிறி 2001.01.09 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2001/03 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 இக்காணியின் விஸ்தீரணம் :- ஏழு தசம் ஏழு ஒன்று பேர்ச்சஸ்(0ஏ.0றூ.7.71 பே.) இக் காணியிலுள்ள கட்டிடம் எல்லம் சேர்த்து.

கடன் எடுத்த இரத்மலானை, பொருபெணபெரி ரோட், கட்டிடம் இலக்கம் 40 பதிவு விலாசத்தில் அமைந்துள்ள த டிரேஸ்மான் என்எல் ( பிறைவேட்) லிமிட்டட் முன்பு ஸ்டீல்பீட்ஸ் டிரேடிங் (பிறைவேட்)லிமிட்டட் , மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடு வைத்துள்ளார்.

மேல் சொல்லப்பட்ட காணியை 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**: தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 2016.08.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலன்ட் ''மற்றும் "வீரகேசரி"ஆகிய பத்திரிகைகளையும் 2016.08.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2016.08.19 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலன்ட் "மற்றும் "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் ஏல விற்பனை விளம்பரத்துக்காக பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்**: கொம்பனி வீதிச் சந்தியிலிருந்து டொக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை ஊடாக 250 மீற்றர் சென்ற பின்பு ஆதனம் இடது பக்கம் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட மொத்த விளம்பர செலவுத் தொகை ;
(7) VAT வரிகள்;

மிகுதி (90%) ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பீஎல்சியில் உள்ள பிரதான அலுவலகம் அல்லது கந்தானை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- பிரதான முகாமையாளர், (கடன் அறவிடுதல் ) கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 21 , சேர். ராசீக் பரீட் மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி இல. : 011-2486766,

தொலைநகல் இல.: 011-2347717

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

8- 530

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன்தொடர்பு இலக்கம்: 77055364

கிரிஎல்ல,ஹிந்துரன்கல, இல.44 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கொடே பதிரன்னஹலாகே இந்திக குமார பதிரன மற்றும் திருமதி புய்யப்பு ஆரச்சிகே வத்சலா பிரபோதனி ஆகியோர் ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.06.24 ஆந் திகதிய 1973 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.06.20 ஆந் திகதி திங்கட்கிழமை டெய்லி நியுஸ், தினகரன் ,தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 24, டொறிங்டன் வீதி,கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரம அவர்கள் 2016.06.20ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளை பல்லேபற்றுவில் எகெலியகொட பிரதேச சபை எல்லைகளுள் எகெலியகொட பிரதேச செயலகப் பிரிவில் ஹிந்துரன்கல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹிந்துரன்கல கிராமத்தில் அமைந்த "திகனகொடல்லவத்த" என அழைக்கப் படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். இராம கிருஷ்ணன் தயாரித்த 20.10.2006 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2412/06 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : எகெலியகொடயிலிருந்து இடங்கொட வரை பிரதான வீதியும் F.V.P.256 இல் துண்டு 385 உம்; கிழக்கு : எகெலியகொடையிலிருந்து இடங்கொட வரை பிரதான வீதியும்; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2412/06 இல் துண்டு 02 மற்றும் F.V.P.56 இல் துண்டு 382 உம்; மேற்கு : F.V.P.56 இல் துண்டு 382 மற்றும் F.V.P.56 இல் துண்டு 385 (F.V.P.56 இல் துண்டு 382 மற்றும் F.V.P.256 இல் துண்டு 385 என பதிவு செய்த) எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச்(0ஏ. 1றூ. 20பே.) அல்லது ஹெக்டெயர்கள் சைபர் தசம் சைபர் ஐந்து சைபர் (ஹெக்டெயர் 0.050) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு

அமைந்துள்ள சகலதும் ஆகும். இது அவிசாவலை காணிப் பதிவகத்தில் V179/220 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

ஜே. டி. பி. டபிள்யு. ஜயகொடி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அயகம.

8-531

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை, தாசிய பற்று, நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குள், கட்டான பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கட்டுநாயக்க சீதுவை நகர சபை எல்லைகளுக்குள், 143ஏ-கட்டுநாயக்க தெற்கு கிராம அலுவலர் பிரிவு, கட்டுநாயக்கவில் அமைந்துள்ளதும் ''தவட்டகஹவத்தை கொட்டஸ மற்றும் தவட்டகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபொற்ற நிலஅளவையாளர் பீ.டி.என். பீரிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 25.06.1995, 2012.03.02 மற்றும் 2015 .07.18 திகதிகளில் நிலஅளவை செய்யப்பட்ட வரைபடம் இல. 726[ஏஏ] இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ என அடையாளமிடப்பட்டுள்ளதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. ஏலவிற்பனை.

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 01றூ. 7.75பே.)**

*(கடப்பாடுடைவரான ஸ்ரீ மாயா ரிரேடிங் (ப்லீரீ) லிமிட்டெட் மற்றும் ஈடுவைத்தவாரான கட்டவலகே அஜித் பிரேமகீர்த்தி டீ விஜேசிங்ஹ ஆகியோர், பிரசித்த நொத்தாரிசு சீ. தயாரத்ன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 25 செத்தெம்பர், 2015 திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 10121 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்கள்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- கொழும்பு கோட்டையிலிருந்து கொழும்பு-கண்டி - A1 பெருவீதி வழியே களனி பாலத்தைக் கடந்ததும் இடதுப்பக்கத்திலுள்ள பேலியாகொடை-புத்தளம் A3 பெருவீதியில் சென்று, A3 பெரு வீதியில் 24 கி.மீ. கல்லைக் கடந்ததும் நுககஹ வீதியில் ஏறக்குறைய 300 மீற்றருக்கப்பால் வலதுபக்கத்திலுள்ள நுககஹவீதி (சரத் மாவத்தை)யில் விற்பனைக்குரிய ஆதனம் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது. இது நீர்கொழும்பு நகரிற்கு அண்ணளவாக ஏறக்குறைய 7.8 கிலோமீற்றரும் விற்பனைக்குரிய இவ் வாதனத்திலிருந்து ஏறக்குறைய கொழும்பு கோட்டை 29.6 கிலோ மீற்றரிலும் இருக்கின்றது.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்படடுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2016,செத்தெம்பர் 09 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு** - 2016.08.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய ''டெய்லி நியுஸ்'', ''லக்பிம்'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.** - பின்வரும் தொகைகளை ஏலதாருக்கு காசாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளுர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.செ.வ. கட்டணங்கள்;
(3) ஏலதாரரின தரகு கொள்வவை விலையின் 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்);
(4) விளம்பர செலவுகள் கட்டணங்கள்;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணம்;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1,500 மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறு கட்டணங்கள்.

கொள்வவை விலெயின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்பாவிட் டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் ''கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., அறவீடுகள் தலைமை'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667130, 011-4667237, 011-46672229.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி : 0113068185
தொலைநகல் : 2572940

8 - 538

---

**மக்கள் வங்கி**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை**

வவுனியா வெங்கலச்செட்டிக்குளம், பூவரசங்குளம், செட்டிக்குளம் றோட்டில் 2 ஏக்கர் 0 றூ0.09 பேர்ச். ( 0.8096 ஹெக்டர்) விஸ்தீரணமான காணியும் மிகப் பிரமாண்டமான கட்டிடமும்

றொட்மன் எலக்றோட்ஸ் நிறுவனத்தால் மக்கள் வங்கிக்கு அடகு வைத்து மீட்கப்படாத சொத்து.

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி 2016.09.03 ஆந் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**ஆதனத்தை சென்றடையும் விதம்**: வவுனியா நகரில் கச்சேரியடிச் சந்தியிலிருந்து மன்னார் றோட் பாதையால் வரும்போது 14 ஆவது மீற்றரில் பூவரசங்குளம் சந்தியுள்ளது. அங்கிருந்து 2 கி. மீற்றர்கள் செட்டிக்குளம் றோட்டால் வர எருக்கலங்கல் சந்தி , அதே பாதையில் வலது பக்கமாக சொல்லப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது. தனியார்/ அரச பஸ் சேவைகளுமுண்டு.

**ஆதன விவரணம்**: வவுனியா பெரும்பகுதி வெங்கல செட்டிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு, செட்டிக்குளம் பிரதேச சபை குருக்கள் புதுக்குளம் கிராமசேவையாளர் பிரிவு , மணியர் குளக் கிராமத்தில் உள்ள மணியர்குளத்துக்காடு என்றழைக்கப்படும் 02ஏ.0றூ.0.09பேர்.விஸ்தீரணம் கொண்டது. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம்.சீ. மொகமெட் றாபீக் 2012.07.02 ஆந் திகதிய 3763 ஆம் இலக்க நிலஅளவை வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள ஆதனம்; இத்துடன் 10976 ச.அ. விஸ்தீரணமான கட்டிடமும் 100 அடி ஆழமான குழாய்க் கிணறும், சீமெந்தால் கட்டப்பட்ட கிணறும்.

"தொழிற்சாலையின் இயந்திராதிகள் ஏல விற்பனைக்குள் இல்லை"

**தீர்மான அறிவித்தலுக்கு** : 2015 திசெம்பர் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி வெளியான தினகரன் பத்திரிகை மற்றும் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெளியான "டெயிலி நியுஸ்", "தினமின" பத்திரிகைகளையும் தயவு செய்து பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**: ஏல விற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும்.-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து சதவீதம்)
2. உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய விற்பனைவரி கொள்விலையில் 1% (ஒரு வீதம்)
3. விற்பனை விலையின் ஏலதாரர் தரகு கட்டணம் 2.5 (இரண்டரை சதவீதம்)
4. இலிகிதர் மற்றும் ஏலம் கூவுவோர் கட்டணம் 1,000.00 ரூபா
5. விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
6. விற்பனைச் சான்றிதழ் முத்திரைக் கட்டணம் என்பவற்றுக்கான கட்டணங்கள்

கொள்வனவு விலையின் மீதி 90% ( தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் யாழ்ப்பாணம்/வவுனியா மக்கள் வங்கி பிரதேச தலைமை முகாமையாளர் அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.யாழ் தொலைபேசி இல. 021- 2222601/ 2223836 வவுனியா - 024- 2222972/2225054.

(காணி உறுதி பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்) தவறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்ட பத்து 10% பணத்தினை பறிமுதல் செய்வதற்கும் உடமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்குண்டு.

கா. பொ. பாலகிருஷ்ணன்,
நீதிமன்ற ஆணையாளர்,
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 692,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 0212222940- 0766035221

8-579